**செய்தி வெளியீடு எண்: 230** **நாள்: 05.04.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

ரஷ்ய நாட்டைச் சேர்ந்த 8 வயது நிரம்பிய மாஸ்டர் ரோமன் என்ற குழந்தைக்கு தொடர்ந்து 3 முறை இருதய செயலிழப்பு ஏற்பட்டது. மேலும், 3 மணி நேரத்திற்கு மேலாக இருதயம் தனது துடிப்பை நிறுத்திய பொழுதிலும், எக்மோ (ECMO) சிகிச்சை மூலமாக அக்குழந்தையின் இருதய துடிப்பை மீண்டும் மீட்டு இருதய மாற்று அறுவை சிகிச்சை மூலம் அக்குழந்தைக்கு வெற்றிகரமாக மறுவாழ்வு அளிக்கப்பட்டது. இவ்வரிய சிகிச்சை சென்னை ஃபோர்ட்டிஸ் மலர் மருத்துவமனையில் மருத்துவர் கே.ஆர். பாலகிருஷ்ணன், டாக்டர் சுரேஷ்ராவ் மற்றும் டாக்டர் நாகேஸ்வரன் ஆகியோர் உள்ளிட்ட மருத்துவக் குழுவினரால் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது. 3 மணி நேரத்திற்கு மேலாக இருதயம் தனது துடிப்பை நிறுத்திய தருவாயில் இருதய செயல்பாட்டினை மீட்டு இக்குழந்தைக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்ட நிகழ்வு இதுவரை இதுபோன்று உலகில் வேறெங்கும் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டின் சிறப்பான மருத்துவக் கட்டமைப்பு மற்றும் தமிழ்நாடு அரசின் உடலுறுப்பு தானம் சார்ந்த நடைமுறைக்கும், இவ்வகை சிறப்பு அறுவை சிகிச்சைகளுக்கும் தொடர்ந்து உறுதுணையாக இருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களை இன்று (5.4.2018) தலைமைச் செயலகத்தில், ரஷ்யா நாட்டு சிறுவன் ரோமன் புய்யான்கின் மற்றும் அவரது தாயார் திருமதி புய்யாக்கின் ஏகடெரினா ஆகியோர் நேரில் சந்தித்து தங்களது பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொண்டார்கள். இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், ஃபோர்டிஸ் மலர் மருத்துவமனையின் முதன்மை இதயவியல் மற்றும் இதயமாற்று அறுவை சிகிச்சை நிபுணர் மருத்துவர் கே.ஆர். பாலகிருஷ்ணன், இதய அவசர சிகிச்சை மற்றும் இதய மயக்கவியல் பிரிவு தலைவர் மருத்துவர் சுரேஷ் ராவ் மற்றும் ஃபோர்டிஸ் மலர் மருத்துவமனையின் நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**